1971 ஜூலை 28]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி முடிவு எடுத்து செயல்படும் போது, அந்த மாளிகையை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்துவதற்கு அரசு யோசனைகள் செய்யும். உடனடியாக இப்பொழுது மாற்றுவதாக இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஆளுநர் மாளிகையானது ஐ.ஐ.டி. இருக்கும் மாளிகைக்கு மாற்றப்படும், அதற்காக மத்திய சர்க்காருடைய யோசனையைக் கேட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் பார்த்தேன். பிரதமர் அவர்களிடமிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு முடிவு கிடைக்கக்கூடிய அளவில் குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் இதில் கவர்னர் மாளிகை மாற்றுவது தமிழ்நாட்டை மட்டும் கலந்து செய்யக் கூடியது அல்ல, எல்லா மாநிலங்களிலும் அதைப் பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஆகவே, இதை அகில இந்திய ரீதியில் இந்தப் பிரச்சினையை ஆராயவேண்டும் என்று எழுதி யிருக்கிறார்கள். விரைவில் ஆராய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** ஆளுநர் மாளிகையைச் சுற்றியுள்ள இடங்களில் மிருகக் காட்சி சாலையாக அமைக்க செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே கவர்னர் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாறினால், கவர்னர் தங்கியுள்ள இடம்போக மீதமுள்ள இடத்தில் மிருகக் காட்சி சாலை வைக்க இயலுமா என்று அரசு யோசித்துக் கொண்டு இருந்தது. இப்பொழுது அது இயலாத காரியமாகத் தென்படுகிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, ஆளுநர் மாளிகை மாநில அரசுக்குச் சொந்தமா அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த மாளிகை மாநில அரசுக்குச் சொந்தம் ; கவர்னர் எங்கே குடியிருப்பது என்று சொல்லும் உரிமை மத்திய சர்க்காருக்குச் சொந்தம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆளுநர் மாளிகையை மாற்றுவதில் அகில இந்திய அடிப்படையில் மாற்ற வேண்டும் என்று மத்திய சர்க்கார் கடிதம் எழுதியிருப்பது பற்றிச் சொன்னார்கள். இவ்வளவு பரந்த நிலம் மற்ற மாநிலங்களிலும் இருக்கிறதா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மற்ற மாநிலங்களில் நம்முடைய ஆளுநர் இடத்தைவிட மிகக் குறைவானதாகத்தான் இடங்கள் அங்கெல்லாம் இருக்கின்றன.

## பரிசுச்சீட்டு அச்சிட இயந்திரங்கள்

***496 வினா—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரிசுச்சீட்டு அச்சிட வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதற்கான செலவு என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ரூபாய் 23.64 இலட்சம்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுக்களில் பெரும்பாலும் எண்ணிக்கையைத் திருத்தக்கூடிய சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றனவே? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எண்ணிக்கையைத் திருத்தினாலும், வேறு வகைகளில் கண்டுபிடிக்கக்கூடிய அளவில் குறிப்புக்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன.

*Destruction of Nylon fishing nets at Oorur Kuppam*

*511 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state wheher nylon fishing nets were destroyed by fire at Oorur Kuppam near Adyar in Madras City about the 6th April, 1971?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம். ஊரூர் குப்பத்தில் 5—4—71 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இத்தீவிபத்தில், திருமதி முத்தம்மாள் என்பவருக்குச் சொந்தமான ரூ. 2,000 மதிப்புடைய இரண்டு நைலான் வலைகள் சேதமடைந்து பயனற்றுப் போய்விட்டன.

*Supply of nylon twine to fishermen.*

*512 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) the grounds on which the Nylon nets are being sold to fishermen in this state; and

(b) the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்கும் பணியை மாநில மீனளத்துறை மேற்கொண்டிருக்கவில்லை. கீழ்க்கண்ட இரு திட்டங்களின்கீழ் நைலான் மீன்பிடி முறுக்கு நூல் மட்டுமே வழங்கப் படுகிறது:—

(1) ஈடுசெய் விலை அடிப்படையில் மீனவர்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் வழங்குதலுடன் கூட நைலான் நூலும் வழங்குதல்.

(2) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீனவர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் முறுக்கு நூல் வழங்குதல் முதல் திட்டத்தின்கீழ், மீன்பிடி விசைப் படகுகள் ஒதுக்கம் செய்யப்படும் பொழுது 30 அடி நீளப் படகுக்கு 100 கிலோ நைலான் முறுக்கு நூலும், 32 அடி நீளப்படகுக்கு 150 கிலோ நைலான் முறுக்கு நூலும் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நைலான் முறுக்கு நூல் விலையில் 20 சதவீதம் குறைத்து வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை, ரெண்டாண்டுகால அளவுக்குள் 18 மாதத்தவணைகளில் வசூல் செய்யப் படுகிறது